
# திராவிடத்தால் வாழ்கிறோம்

878

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

69

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## சாதி வேண்டாம், சுயமரியாதை போதும்!

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சாதிய கொடுமைகளை ஒழிக்க பாடுபட்ட நாராயண குருவின் முயற்சிகளால், 1900-களின் தொடக்கத்திலேயே கல்வியை நோக்கி நகரத் தொடங்கியது ஈழவ சமூகம். அப்படி அச்சமூகத்தில் இருந்து கல்வியில் உயர்ந்தோரால், வருடா வருடம் மாநாடுகள் கூட்டப்பட்டன. அந்த வரிசையில், ஈழவ சமுதாய 26-வது மாநாடு 1929-ஆம் ஆண்டு கோட்டயத்தில் மே 6, 7 ஆகிய தேதிகளில் கூட்டப்பட்டது. அதனுடன் சேர்த்து 3 மாநாடுகள் அப்போது நடைபெற்றன. அதில் ஒன்று, தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற 'திருவிதாங்கூர் சுயமரியாதை மாநாடு'.

'செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு' முடிந்து, மூன்றே மாதங்களில் திருவிதாங்கூர் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது.

"உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தீண்டாமையானது ஆகாயத்தில் இருந்தோ, தாய் வயிற்றில் இருக்கும்போதோ உண்டாக வில்லை. மதத்தினாலும், கடவுளினாலும், புராணங்களினாலும், வேதத்தினாலும் உண்டாயிற்று. தீண்டாமை ஒழிய வேண்டு மென்றால், அதை வலியுறுத்தும் மதங்களும், கடவுள்களும், கோவில்களும், அவற்றிற்கு ஆதாரமான வேத சாஸ்திர புராணங்களும் ஒழிய வேண்டும். இவைகளில் ஒரு சிறிது மீதி இருந்தாலும், மறுபடியும் தீண்டாமை வளரும்" என பெரியார் இம்மாநாட்டில் கடவுள், மதம், புராணங்கள் குறித்து 3 மணி நேரம் உரையாற்றினார்.

இறுதியில், செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங்களை, தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரியார் வாசித்தார். சுமார் 16,000 பேர் அரங்கில் இருந்தனர். அதன்பிறகு பேசிய கொச்சி சட்டசபை உறுப்பினர் அய்யப்பர், "இத்தீர்மானங்களை அமலுக்குக் கொண்டு வர வேண்டும். நமது விடுதலைக்கு இதை விடுத்தால், வேறு மார்க்கமில்லை. ஈழவ சமுதாயத்தின் படித்தவர்களும் வாலிபர்களும் இதே அபிப்ராயத்தை வெகு காலமாகக் கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ள வர்களுக்கு தீண்டாமை ஒழிவதற்கு முன்பே, திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒழிக்கப்பட்டு விடும்" என்றுகூறி பெரியாருக்கு மாலை சூட்டினார்.

சுயமரியாதை மாநாட்டுக்கு முன்பே, திருமதி சீனிவாசன் என்பவர் தலைமையில் 'மகளிர் மாநாடு' நடைபெற்றது. கடைசி நாளில், மதன் மோகன் மாளவியா தலைமையில் 'ஆலயப் பிரவேச மாநாடு' கூடியது.

அதில் உரையாற்றிய மதன் மோகன் மாளவியா, பெரியாரின் கருத்துக்கு நேர் முரணாகப் பேசினார்.

'சாதி கெடுதியல்ல' என்றார். 'அதுதான் பெரிய கெடுதி' என குரல் வந்தது. 'இந்து மதம் சிறந்தது' என்றார். 'அதுதான் இந்தியாவைப் பாழாக்கியது' என மக்கள் கூச்சலிட்டனர். பிறகு இராமாயணத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார். 'அது பார்ப்பன நன்மைக்கானது. நாங்கள் இராமாயண கலாட்ஷேபம் கேட்க வரவில்லை' என்று கத்தினர். பிறகு, 'ராமன் எல்லோருக்கும் கடவுள்' என்றார். 'ராமன் கடவுள் அல்ல, பார்ப்பன அடிமை' என கூட்டத்தில் இருந்தோர் கூறினர். உடனே 'ராமனுக்கு ஜே' என்றார். ஆனால், ஒட்டுமொத்த கூட்டமும் 'ராவணனுக்கு ஜே' என முழங்கியது. ஓர் இளைஞர் முன்னே வந்து "*We are not here to hear all this nonsense*" என்று கூற திக்குமுக்காடிப் போனார் மாளவியா. வாக்குவாதங்கள் தொடரவே, ஒருகட்டத்தில் பேச்சை முடித்துக்கொண்டார்.

மாளவியாவைக் கண்டித்து அதே கூட்டத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. 'மாளவியாக்களாலும் காந்திகளாலும் சாதி ஒழியப்போவதில்லை. சுயமரியாதை இயக்கத்தைத் தவிர எங்களுக்கு வேறு கதி இல்லை' என்று மாளவியா காதில் விழும்படியே மக்கள் பேசிச் சென்றனர்.

**...கூட்டம் திரளும்**

## அசத்தும் அரசுப் பள்ளி வாகனம்!



சென்னை பெருநகர மாநகராட்சியில் 417 அரசுப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பள்ளிகளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை அரசு மேம்படுத்திக் கொண்டி ருக்கும் நிலையில், புதிய முயற்சியாக சென்னை அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, தனியார் பள்ளிப் பேருந்துக்கு இணையான பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மணலி புதுநகர், வெட்டுவாங்கேணி மற்றும் எழில்நகர் பகுதிகளில் அமைந்துள்ள மூன்று மாநகராட்சி பள்ளிகளுக்கு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் வீடுவரை சென்று ஏற்றிச் செல்லும் வகையிலும், மாலையில் வந்து விட்டுச் செல்லும் வகையிலும் இந்தப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பேருந்துகளில் தலா ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு பாதுகாவலர் நியமிக்கப்பட்டு, மாணவர்கள் பாதுகாப்பாக பயணப்படுகின்றனர்.

இந்தப் பேருந்து வசதி காரணமாக, அந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், பொதுப்பேருந்துகளில் பயணிக்கும் அலைச்சலின்றி பள்ளிக்கு வந்து செல்ல வழி ஏற்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள் கற்கும் திறனும் மேம்பட உள்ளது. குறிப்பாக, அரசுப் பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் கவலையும் குறைந்துள்ளது.

இந்தப் பேருந்து பயணத்தைப் பார்த்த பலரும், தி.மு.க. அரசு கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்பதைக் கண்டு வியப்பதாக சமூக வலைதளங்களில் படங்களைப் பகிர்ந்து வருகின்றனர். மற்ற மாநிலங்களை விட, தமிழ்நாடு குறைந்தது 50 வருடம் முன்னோக்கி உள்ளது என்பதை சென்னை பள்ளி வாகனமும் சொல்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### போராட்ட கால புகைப்படம்!



மு.க.ஜீவா

1994-ஆம் ஆண்டு, தஞ்சை பொதுக்குழு வெற்றிகரமாக நடந்து, கழகத்தின் சின்னம், கொடி ஆகியவை தலைவர் கலைஞர் தலைமை யிலான தி.மு.க.விற்கே சொந்தம் என உறுதி செய்யப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு தமிழ்நாட்டிலேயே, நாகையில்தான் முதல் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த மேடையில், தலைவரிடம் கழக வளர்ச்சி நிதியாக ரூ.500 கவரில் வைத்து கொடுத்தேன். தலைவர் கையில் அந்த கவர் இருக்கிறது. தலைவர் அருகில் மாவட்ட முன்னாள் செயலாளர் அண்ணன் அ.அம்பலவாணன், செம்பை மதிவாணன் ஆகியோர் உள்ளனர். இந்தப் படம் நான் பாதுகாக்கும் பெட்டகம்.

**– மு.க.ஜீவா, தலைவர், பகுத்தறிவாளர் கழகம், நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

மதுபாலன் வேல்சாமி

69

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## லட்சியங்களை உணர்த்திய எழுத்துகள்!

திரைப்படக் கலை மூலமான பிரச்சாரத்தில் தனிமுத்திரை பதித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அந்த வகையில், அவரது திரைப்படங்களில் சமூகக் கருத்துகளை மறுவாசிப்புச் செய்யும் வகையில், வெளிவந்துள்ள நூல் 'திரையிலும் உதித்த சூரியன்'. எழுத்தாளர் குமரன் தாஸ் எழுதியுள்ள இந்த நூலை, கருப்புப் பிரதிகள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

"இந்த நூலை வாசிக்கும் போது படத்தைப் பார்ப்பது போல இருக்கிறது. குமரன் தாஸ் ஒரு கதை சொல்லியாக இருப்பதால், கலைஞரின் திரைப்படங்கள் குறித்து சொல்வது மிக ஈர்ப்பாக இருக்கிறது" என இந்த நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கிற பத்திரிகையாளர் ப.திருமாவேலன் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலினை வாசிக்கிற எல்லோருமே அந்த அனுபவத்தை உணர முடியும். அது குமரன் தாஸ் எழுத்துகளால் மட்டுமல்ல, கலைஞரின் எழுத்துகள் அந்த கதை சொல்லலை அளிக்கிறது என்றால், மிகையில்லை.




இந்த நூலில், கலைஞரின் திரைப்படங்களை மூன்று கட்டங்களாகப் பிரித்து அணுகுகிறார் குமரன் தாஸ். குறிப்பாக, முதல் கட்ட திரைப்படங்கள் 1947 – 1967 வரை என எடுத்துக்கொண்டு பேசுகிறார். அந்த 20 ஆண்டுகளில், சமூக அரசியல் தளத்தில் மிகத் தீவிரமாக செயல்பட்டதைப் போன்று திரைத்துறையிலும் தீவிரமாக இயங்கியிருக்கிறார் கலைஞர். ஒரு போர் வீரனைப் போல மிகத்தீவிரமாக திரையில் இயங்கிய காலம் இவை என்கிறார் குமரன் தாஸ்.

இரண்டாம் கட்டம் 1968 – 1987 எனப் பிரித்துள்ளார். இந்த காலகட்டத்தின் முதல் பத்து ஆண்டுகளில் ஐந்து படங்களும் அடுத்த 10 வருடங்களில் 17 படங்களுமாக கலைஞர் எழுதியிருக்கிறார். அதற்கு முந்தைய காலகட்டங்களில் பிரச்சாரம் செய்து வந்தவற்றை, இரண்டாம் காலகட்டத்தில் நடைமுறைப்படுத்தும் இடத்தில் தி.மு.க இருந்தது. அதே சமயம் பழைய அடிப்படை வாதங்களைத் தகர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நீண்ட கால திட்டங்கள், எதிரிகளின் தாக்குதல்களை உடனடியாக சமாளிக்க வேண்டிய நிலை என பல்வேறு கடமைகளுக்கு நடுவே இந்தக் காலகட்டத்தில் கலைஞரின் பங்களிப்பு இருந்தது.

மூன்றாம் கட்டமாக 1988 – 2001 காலகட்டத்தை எடுத்துக் கொள்கிறார். இதற்கிடையே 1996 முதல் 2005 வரையிலான பத்தாண்டுகள் திரைக்கதை – வசனம், தயாரிப்பு, பாடல் என எந்த பங்களிப்பும் செய்யாமல் ஒதுங்கி இருந்ததையும் பதிவு செய்துள்ளார். இந்தப் பத்து ஆண்டுகளில் முதல் ஐந்தாண்டுகள் முதலமைச்சர் ஆகவும், அடுத்த ஐந்து ஆண்டுகள் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். மீதமுள்ள 14 ஆண்டுகளில் 1988 முதல் 96 வரை 12 திரைப்படங்களும் 2005 முதல் 2011 வரை ஆறு திரைப்படங்களுமாக மொத்தம் 18 திரைப்படங்களுக்கு கலைஞர் பங்களிப்பு செய்துள்ளார்.

அவரது திரைப்படங்களில் மன்னராட்சி எதிர்ப்பு, மக்களாட்சி ஆதரவுப் பிரச்சாரம், நிலப்பிரபுத்துவ ஜமீன்தாரிய எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, சாதி மறுப்பு, கலப்புத் திருமண ஆதரவு, வர்க்க ஏற்றத்தாழ்வு எதிர்ப்பு, சமதர்ம பாட்டாளி வர்க்க ஆதரவு, பாலிய விவாக எதிர்ப்பு, ஆணாதிக்க எதிர்ப்பு, ஆண் பெண் சமத்துவம், விதவை மறுமணம் ஆதரவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பகுத்தறிவுப் பிரச்சாரம் ஆகிய அம்சங்கள் மையப் பொருளாக இருந்துள்ளன எனத் திரைப்படங்களைக் குறிப்பிட்டுப் பட்டியலிட்டுள்ளார்.

அவர் படங்கள் சனாதன எதிர்ப்பையும் சமத்துவத்தை யுமே மக்களுக்கு போதித்தது. சமூகநீதி – சமத்துவ இலட்சியத்தில் தீராத காதல் கொண்டவராக அவரது திரைப்படங்களில் வெளிப்பட்டன என்பதை வாசிப்பின் ஊடாக உணர வைக்கிறது 'திரையிலும் உதித்த சூரியன்'.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### திருவாரூர் மாநாடு!

1940-இல் நடைபெற்ற திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டில், திராவிட நாட்டு ஆதிதிராவிட மக்கள் 'அரிசனங்கள்' என்ற பெயரால் அழைக்கப்படுவதை மாற்றி, 'ஆதி திராவிடர்கள்' என்ற பெயராலேயே அழைக்கப்பட வேண்டுமென்று அரசையும் பொதுமக்களையும் வேண்டிக்கொள்ளும் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆதி திராவிட மக்களுக்கு, உரிமைகள் அளிக்கும் விஷயத்திலும் உரிய சலுகை காட்ட வேண்டுமென்றும் இம்மாநாட்டில் வலியுறுத்தியது நீதிக்கட்சி.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.